**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 100 මට්ටම - 2025**

**இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 300 வது தேர்ச்சி மட்டம் - மார்ச் - 2025**

**Bachelor of Arts (External - New Syllabus) 100 Level Examination– March – 2025**

## TLGE - 301: தமிழில் செவ்வியல் இலக்கியம்

## TLGE – 301: Classical Literature in Tamil

කාලය පැය (03) තුනයි.
**மூன்று) 03) மணித்தியாலங்கள்**
Time three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
**எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.**
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න 5ට පිළිතුරු සපයන්න'
**முதலாம் வினா உட்பட எவையேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.**
Answer five questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව 08 කි
**இந்த வினாப்பத்திரத்தில் எட்டு வினாக்கள் உள்ளன.**
There are Eight questions in the question paper.

---

**1. பின்வரும் செய்யுட்களின் இலக்கியச் சிறப்பினை விளக்குக.**

அ) முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ,
இரும்பு திரித்தன்ன மாஇரு மருப்பின்,
பரலவல் அடைய, இரலை தெறிப்ப,
மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்பக்
கருவி வானம் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே, கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி,
நரம்பு ஆர்த் தன்ன, வாங்குவள்பு அரியப்
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி,
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது,
நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தட்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவை! நின் மாணலம் படர்ந்தே.

ஆ) காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே.
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே,
கோடியாத்து நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி, வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்ற மொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்,
யானை புக்க புலம் போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே!

2. சங்க அக இலக்கியங்களில் காணலாகும் கருத்துப்புலப்பாட்டு உத்திகளில், குறிப்பு மொழியாகிய இறைச்சி முக்கியத்துவம் பெறுமாற்றை விளக்குக.

3. ஐங்குறுநூற்றின் வேழப்பத்துப் பாடல்களில் மருதத்திணை வாழ்வியல் பற்றிக் கருத்துரை வழங்குக.

4. விதந்துரைக்கப்பட்டுள்ள புறநானூற்றுப் பாடல்களில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களை விபரிக்குக.

5. பதிற்றுப்பத்து ஆறாம் பத்துப் பாடல்களில், ஆடுகோட் பாட்டுச் சேரலாதனின் சிறப்புக்கள் சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

6. ஏனைய நலன்களை விட, குண நலனே முக்கியமானதென்பதை, திருவள்ளுவர், சான்றாண்மை அதிகாரத்தில் வலியுறுத்துமாற்றை விளக்குக.

7. “திருக்குறளில் இலக்கணமாகக் கூறப்பட்டுள்ள அறக் கருத்துக்களே, சிலப்பதிகாரத்தில் இலக்கியமாக்கப்பட்டுள்ளன.”- இக்கூற்றின் பொறுத்தப்பாட்டை ஆராய்க.

8. தமிழ் அற இலக்கிய வரலாற்றில் நாலடியார் பெறும் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி, அது பின்னை நூல்களுக்கு எவ்வாறு வழிகாட்டியதென்பதை அலசுக.